விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி -25 | 10-08-2003 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 173



படைப்பாளிகள் அழைக்கும் கணினி
தொழில் நுட்பத்தில் ஒருமணி
நேரத்திற்குள் கழுவிப் பெறுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்,
அனைத்திற்கும்
Jaffna Road, Kilinochchi.
யாழ் சாலை, (ரி-8437) கிளிநொச்சி.


# நோர்வே சிறப்புத் தூதுவர் சூல்ஹெய்ம் செவ்வாயன்று இலங்கைக்கு விஜயம்

## குரங்குபாஞ்சான் முகாம் குறித்து ஆராய்வார்

**நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சிறிலங்காவிற்கு வருகை தரவுள்ளதாக சிறிலங்காவுக்கான நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. இவர் குரங்குபாஞ்சானில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் முகாம் குறித்து ஆராய்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.**

இவர் வன்னிக்கு விஜயம் செய்து திருகோணமலை குரங்குபாஞ்சான் முகாம் குறித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

இவருடன் போர் நிறுத்தக் கண் காணிப்புக் குழுவினரும் வன்னிக்கு வருவர் எனத் தெரிவிக்கப்படுகின் றது.அத்துடன் எரிக் சூல் ஹெய்ம் அரசாங்கத்தரப்புப் பிரதிநிதிக ளையும் சந்திக்கவுள்ளதாக தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

குரங்குபாஞ்சான் முகாம் தொடர் பாக போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழு நோர்வே அரசாங்கத்திற்கு அறிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது.இவ்விஜயத்தின் போது இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசின் திட்டவரைவு குறித்த சில விடயங்களும் விடுதலைப் புலிக ளுடன் ஆராயப்படும் என நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

## கெடுபிடிகள் அதிகரிப்பு

சிறிலங்காவின் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் வரவிற்காக நேற்றுமாலை தொடக்கம் யாழ்நகரையும், அதனை அண்டியபகுதிகளிலும்இராணுவம் மற்றும் பொலிஸ்படையினரின் பாதுகாப்புக்கள், கெடுபிடிகள் அதிகரித்துக்காணப்பட்டன. (33)

## இராணுவத்திற்கு தகவல் வழங்குபவர் இனம் தெரியாதோரால் கொலை

(லண்டன்)

அம்பாறை மாவட்டத்தில் முன்னாள் ரெலோ உறுப்பினரும் தற்போது இராணுவ புலனாய்வுத் துறையினரிற்குத் தகவல் வழங்கி வருபவருமான சம்புநாதபிள்ளை விவேகானந்தராஜா என்பவர் இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல் லப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்றில் நேற்று மாலை வீதியால் துவிச்சக்கரவண்டியில் இவர் சென்று கொண்டிருந்த சமயம் எதிரில் மோட்டார் சைக்கிளில் வந்த வர்கள் இவரை வழிமறித்து துப்பாக் கியால் சுட்டுக் கொன்றனர். தலையி லும் முதுகிலும் ஐந்து சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன என்று அக்கரைப்பற்றுப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

34 வயதான இரண்டு பிள்ளைக ளின் தந்தையான இவர் ஏற்கனவே ரெலோ உறுப்பினராக இருந்து பின் னர் ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணி யில் இணைந்து கொண்டவர் சில காலம் ராசிக்குழு ஊடாக சிறி லங்காவின் தேசிய துணைப் படை யில் இருந்துள்ளார். நீண்டகாலமாக கொழும்பில் தங்கியிருந்த இவர் தனது சொந்த ஊரான அக்க ரைப்பற்றிற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரே வந்திருந்தார். இவரின் சடலம் அக்கரைப்பற்று வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## குரங்குபாஞ்சான் குறித்து சூல்ஹெய்மிற்கு விளக்குவோம்

### - சிறில.பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்

(லண்டன்)

குரங்குபாஞ்சான் முகாம் விவ காரம் குறித்து சமாதானத்தூதுவர் எரிக் சூல்ஹெய்மிடம் அரசாங்க த்தின் நிலைப்பாடு குறித்து எடுத் துக்கூறுவோம் என சிறிலங்கா பாது காப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ் ரின் பர்னாண்டோ கூறியுள்ளார்.

போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் கொக் லண்ட் ஆகஸ்ட் 7ஆம் திகதி இலங் கைக்கான நோர்வே நாட்டுத்தூது வருக்கு எழுதிய கடிதத்தை நாங் கள் பார்த்தோம். அதில் திட்டவட்ட மாக இந்த முகாமைவிட்டு விடுத லைப்புலிகள் விலகவேண்டும். அது போர்நிறுத்த உடன்படிக்கையை தீவிரமாக மீறும் செயல் என்றே கூறப்பட்டிருந்தது. ஆனால் விடுத லைப் புலிகள் இந்த நிலைப்பாட்டை ஏற்பதாக இல்லை எனத் தெரிவித்த

(8ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகத்திற்கு எதிர்ப்பு சுயாட்சி உருவாகுவதற்கே வழிவகுக்கும்

### தமிழ்க் காங்கிரஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகத்திற்கான எதிர்ப்பு சுயாட்சிக்கு வழிவகுக்கு மென அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கூறியுள்ளது.

இடைக்கால நிர்வாக சபைக் கெதிராக பேரினவாதிகளும் முறை யற்ற அரசியல் நடத்துபவர்களுமே குரல் எழுப்புகின்றனர். இது சிங்கள மக்களின் கருத்தல்ல என்று அக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் சமாதானத்தை ஏற் படுத்த சிங்கள தேசிய இனம் பிரத மர் ரணில் விக்கிரமசிங்க தலைமை யிலான அரசாங்கத்திற்கு அங்கீ காரம் வழங்கியுள்ளது.

இனப்பிரச்சினைத்தீர்வுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டுமே பேசவேண்டுமென தமிழ் மக்களும் தேர்தலில் தீர்ப்பு வழங் கியுள்ளனர் என்றும் அவர் கூறியுள் ளார்.

## பரீட்சை முடிவுகள் பார்வையிடலாம்

இவ்வாண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற க.பொ.த. (உயர்தர) பரீட்சை முடிவுகள் வெளிவந் துள்ளன. இதனை இணையத்தளம் மூலம் யாழ்.சாலை கிளிநொச்சி யிலுள்ள ஈழநாதம் பணிமனையில் பார்வையிடலாம். சுட்டெண்ணுடன் வருகை தரவும்.

### பரீட்சை பிற்போடல்

இன்று நடைபெற இருந்த தமிழீழ சட்டக்கல்லூரிக்கு புதிய மாண வர்களை உள்வாங்குவதற்கான உள்வாரி மாணவர்களுக்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 03.10.2003 புதன்கிழமை அன்று கிளிநொச்சியிலுள்ள தமிழீழ சட்டக்கல்லூரியில் நடைபெறும் என்று தமிழீழ சட்டக்கல்லூரி நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

## சிறிலங்காப் பிரதமர் ரணில் நேற்று சீனா பயணமானார்

(கொழும்பு)

சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அதிகாலை சீனாவிற்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

பிரதமரோடு அமைச்சர்களான லக்ஸ்மன் கிரியல்ல, தயாரத்ன, பிரதி அமைச்சர் சஜித் பிரேமதாச ஆகியோரும் சீனாவிற்குச் சென்றுள்ளனர்.

வரும் 13ஆம் திகதி வரை இவர்கள் சீனாவில் தங்கியிருந்து அந்த நாட்டின் தலைவர்களோடு சந்திப்பை மேற்கொண்டு வர்த்தக மற்றும் பொருளாதார ஒப்பந்தங்க ளிலும் கைச்சாத்திடுவர்.

அத்தோடு இச்சந்திப்புக்களில் தமது அரசுவிடுதலைப்புலிகளுடன் மேற்

(8ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த.(உயர்தர) பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின

(அலுவலக செய்தியாளர்)

க.பொ.த.(உயர்தர) பரீட்சை முடிவுகள் நேற்று வெளியிடப் பட்டுள்ளது. இம்முடிவுகள் தபால் மூலமாக பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டபாட சாலை களுக்கான முடிவுகள் நேற்றுமாலை வரை வந்தடைய வில்லை.

இணையத் தளத்தில் இப்பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ள வகையில் எமக்குக் கிடைத்த சில சிறந்த பெறுபேறுகளைக் கீழேதரு கிறோம்.

அக்கராயன் மகாவித்தியாலயத் தைச் சேர்ந்த பா.நிரஞ்சன் வர்த்த கப்பிரிவு 3ஏ மாவட்ட ரீதியில் முத லாம் இடம். பா.நிரோஜன் 3ஏ வர்த்த கப்பிரிவு அக்கராயன் மா.வி. மாவட்ட ரீதியாக முன்றாம் இடம் ஆ. சசிவனிதா வர்த்தகப்பிரிவு 3ஏ கிளி ம.வி. மாவட்டநிலை நான்காமிடம், சுதாகரன் வர்த்த கப்பிரிவு 2ஏ,பி கிளி. இராமநாதபுரம் ம.வி. ஆகியமாணவர்களும் உயி ரியல் பிரிவில் ச.திவாகர் 2ஏ.பி.

(8ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் குழந்தைகள் கடத்தப்பட்டு நகைகள் திருட்டு

(வவுனியா)

வவுனியா பொது வைத்தியசா லையில் சிகிச்சை பெறச் செல்லும் குழந்தைகள் கடத்திச் செல்லப்பட்டு அவர்கள் அணிந்திருக்கும் தங்க நகைகள் களவாடப்பட்டு வருகின் றது.

கடந்த ஒரு வாரத்தில் இரண்டு குழந்தைகள் கடத்தப்பட்டு அவர் கள் அணிந்திருந்த தங்கநகைகள் களவாடப்பட்டுள்ளன.

கடத்தப்பட்ட குழந்தைகளை கொள்ளையர்கள் அனாதரவாக வவுனியா நகரப் பகுதியில் விட்டுச் சென்றுள்ளனர் என்று வவுனியா பொலிசார் தெரிவித்துள்ளனர். இது குறித்து வவுனியாவிலுள்ள மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத் திற்கும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

## கச்சதீவு கடற்பிராந்தியத்தை விட்டுக் கொடுக்க முடியாது

### சர்வதேச தமிழீழ மாணவர்பேரவை தெரிவிப்பு

"எம் மீன்பிடி வளத்தின் இதயப் பகுதியான கச்சதீவு கடற்பிராந் தியத்தை எவ்விதத்திலும் விட்டுக் கொடுக்க முடியாது"என சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்று வலியுறுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் பேரவை யினால் வெளியிடப்பட்ட வடக்கு கிழக்கு மீனவர்கள் எதிர் நோக்கும் சவால்கள் தொடர்பான அறிக் கையிலேயே மேற்கூறப்பட்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கச்ச தீவையும்,அதனைஅண்டிய கடற் பிராந்தியத்தையும் தமிழ் நாட்டிற்கு குத்தகைக்குத்தரும்படி வற்புறுத் தப்படுகிறது.

இம்முயற்சி சாத்தியப்படுமாயின் அதை எம்மால் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளமுடியாதென அவ் அறிக் கையில் மேலும் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது. கடந்த 20 வருடகால யுத்தத்தினால் இலங்கை மீனவர்கள் அரசபடைகளால் அடக்கப்பட்டு மீன் பிடிவளங்கள் உட்பட உயிரிழப் புக்கள் மற்றும் பொருள் இழப்புகள் எனப் பலவற்றை இழந்துள்ளனர்.

இதேவேளை 1976 ஆம் ஆண்டு இந்தியாவுடன் இலங்கை செய்துகொண்ட உடன்படிக்கையின் படி கச்சதீவும் அதனை அண்டிய கடற்பிராந்தியமும் இலங்கை வடபகுதி மீனவர்களுக்குச் சொந்தமானதாக குறிப்பிடப்பட்டு ள்ளது. அத்துடன் இது சட்ட பூர்வமாக நியாயப்படுத்தப் பட்டுள்ளது. இவ்விடயம் தொடர் பாக அண்மையில் ஜெயலலிதாவை சிறிலங்கா அரசின் பிரதிநிதிகள் புதுடில்லியில் வைத்து இப்பிர தேசத்தை குத்தகைக்கு கொடுப்பது தொடர்பாக நடத்திய பேச்சு

(8ஆம் பக்கம் பார்க்க)

## வவு.வில் கருகிய நிலையில் இளைஞனின் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா - தச்சனா குளத்த ருகில் 30 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரின் சடலம் ஒரு கை இல்லாமல் கருகிய நிலையில் கண்டெடுக்கப்பட்டு பொலிசாரினால் வவுனியா பொது வைத்தியசாலை யில் மருத்துவ பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சடலம் கிடந்த பகுதியிலிருந்து 200 யார் தொலைவில் இறந்தவரது துண்டிக்கப்பட்ட கை கிடந்தது. சடலத்தின் அருகே பெற்றோல் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படும் பிளாஸ்ரிக் கானின் மூடியும் லைற்றர்

(8ஆம் பக்கம் பார்க்க)

# கரைச்சிப் பிரதேச காணிக்கிளை அலுவலகத்தால் காணி உரிமப்பத்திரங்கள் வழங்க நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சிப்பிரதேச காணிக் கிளை அலுவலகத்தினால் கரைச்சிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட காணி உரிமையாளர்களுக்கு தற்போது காணி உரிமப் பத்திரங்கள் வழங்கப்பட்டுவருவதாக தெரியவந்துள்ளது.

இது குறித்து கரைச்சிப் பிரதேச காணி உத்தியோகத்தர் செ.சிறீரங்கநாதனுடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்டபொழுது தெரிவிக்கையில்,

இதுவரைகாலமும் காணி ஆணையாளரினால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த காணி உரிமங்களை தற்போது காணி உரிமையாளர்களுக்கு வழங்கும் வண்ணம்காணி ஆணையாளர் அறிவித்தல் விடுத்துள்ளமைக்கமைவாக, கரைச்சிப் பிரதேச காணிக்கிளையினரால் உரிமையாளர்களுக்கு காணிக்கான உரிமம் வழங்கும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுவருகின்றது.

இதனடிப்படையில் கடந்த மாதம் 24ஆம் திகதி வன்னேரிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த ஐம்பது காணி உரிமையாளர்களுக்கு வழங்கப்படாதிருந்த காணிஉரிமங்கள் வழங்கப்பட்டதாகவும் கடந்த 5ஆம் திகதி கோணாவில் கிராமத்தைச் சேர்ந்த அறுபத்தொன்பது காணி உரிமையாளர்களுக்கு மேற்படி காணி உரிமங்கள் வழங்கப்பட்டதாகவும், தொடர்ந்து மற்றைய கிராமங்களுக்கும் காணி உரிமங்கள் வழங்கப்படாத காணிஉரிமையாளர்களுக்கு விரைவில் காணிஉரிமங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

கடந்த 84ஆம் ஆண்டு முதல் காணிஆணையாளரால் காணிஉரிமப் பத்திரங்கள்வழங்கப்படுவது இடைநிறுத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## வரிவிளம்பரம்

### வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?

(15.08.2003) ராகு கேது மாற்றமும், ஜீவன் - பிரம்மம் ஐக்கிய வேதாந்த ரகசியமும் அடங்கியன. கணிப்பாசிரியர் PROF சத்தியதாஸன் (சத்யா) கிடைக்குமிடம்:- ருக்குமணி புத்தக சாலை,புதுக்குடியிருப்பு(சி-7773)

### தவறிவிட்டது

கடந்த 30-07-2003 அன்று முல்லைத்தீவு மரக்காலைக்கும் முல்லைத்தீவு பொதுச் சந்தைக்கும் இடையில் முல்லைத்தீவு மணற்குடியிருப்பைச் சேர்ந்த மனோகரசீலன் யதுஸ்ரலா என்னும் பெயருடைய இலங்கை வங்கி சிறுவர் சேமிப்புப் புத்தகம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து முல்லை நகரப் புனரமைப்புக் குழுக் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். மனோகரசீலன். (சி-8152)

### தவறிவிட்டது

வேலு இராசலிங்கம் என்பவரது 562280855V இல.தேசிய அடையாள அட்டை 02-08-2003 அக்கராயன் சென்று வரும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்கவும். தகவல் வே.இராசலிங்கம். (3620)

### முன்பள்ளி விளையாட்டு விழா

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் தண்ணீரூற்று இளநிலா முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த விளையாட்டுவிழா கடந்த வியாழக்கிழமை முன்பள்ளி மைதானத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு லோறன்ஸ் தலைமையில் ஆரம்பமானது.

தண்ணீரூற்று அ.த.க. பாடசாலை அதிபர் ச.சோதிகாந்தனின் ஆசியுரையுடன் விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகி மாலை 5.30 மணிக்கு நிகழ்வுகள் நிறைவாகி பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஆ)

## அக்கராயன்பிரதேசத்தில் கால்நடை வைத்தியசேவை தொடர்ந்து நடைபெறுகின்றது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கால்நடை சுகாதாரத் திணைக்களமும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து அக்கராயன் பிரதேசத்தில் விசேட கால் நடை வைத்தியசேவையினை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த மாதம் 23ஆம்திகதி முதல் அக்கராயன் பிரதேசத்தில் மேற்படி வைத்திய சேவை இடம் பெற்றுவருகின்றது.

மேற்படி பிரதேசத்திலுள்ள 2450 மாடுகளுக்குதொண்டையடைப்பான் தடுப்பூசியும் 1500 கோழிகளுக்கான (ரணிகட்) தடுப்பூசி மருந்துகளும் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் செயற்கைமுறைச் சினைப்படுத்தல், கர்ப்பப் பரிசோதனை போன்ற சேவைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி கால்நடைவைத்திய சேவை, கந்தபுரம், கண்ணகைபுரம், அக்கராயன்,ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இச்சேவை முறிப்பு, ஊற்றுப்புலம் கிராமத்திலும் நடாத்தப்படவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (சோ)

## கண்டாவளைப் பிரதேசத்தில் கமக்காரர் பயிற்சி வகுப்பு

(விசுவமடு)

நோறாட் நிதியுதவியுடன் போரூட் வன்னித் திட்டத்தின் கருத்திட்டத்தினூடாக கமநல சேவைத் திணைக்களமும் கண்டாவளைப் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் நெறியாள்கையில் கமக்கார அமைப்புக்கான பயிற்சி வகுப்பும் கடந்த வெள்ளிக்கிழமை புளியம்பொக்கணை கமநல கேந்திர நிலையத்தில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது.

மங்கல விளக்கை மாவட்ட உதவி ஆணையாளரும், புளியம்பொக்கணை கமக்கார அமைப்புத் தலைவரும், கண்டாவளைப் பிரதேச த.பொ. மே. நிறுவன இணைப்பாளர், போரூட் நிறுவன பிரதிநிதி சாந்தலிங்கமும் ஏற்றி வைத்தனர். தமிழீழ தேசியக் கொடியை தருமபுரம் வலயப் பொறுப்பாளர் ஐயாச்சி ஏற்றி வைத்தார்.

பயிற்சி வகுப்பு பெரும்போக உத்தியோகத்தர் சுந்தரலிங்கம் தலைமையில் ஆரம்பமானது. இந்நிகழ்வில் கண்டாவளைப் பிரதேச செயலர் பி.கா. மத்தியாஸ், கிராமிய கமக்கார அமைப்புப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (14)

## 6ஆம் மாத நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 02 - 07 - 1987

மறைவு 16 - 02 - 2003

### பாலச்சந்திரன் மோகன்ராஜ்

(ஆண்டு-10, கிளி. மத்திய கல்லூரி மாணவன்)

அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையங்கள் அனுப்பியவர்கள், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு 11-08-2003நாளை திங்கட்கிழமை அன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியை நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உன் நினைவில்
மாமா,மாமி,
உடன்பிறந்தோர்,
மைத்துனர்மார்,மைத்துனி.

இ.வரதராசா
துர்க்காவீதி,ஆனந்தபுரம்,
கிளிநொச்சி. (3619)

### கோழி வளர்ப்போர் கவனத்திற்கு

வரும் 16ஆம் திகதி சனிக்கிழமையிலிருந்து ஒவ்வொரு சனிக்கிழமையும் முள்ளியவளைப் பிரதேசத்திலிருக்கும் கோழிகளுக்கான தடுப்பூசி வழங்கப்படுமென தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லை மாவட்டச் செயலகக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (26)

### வேவு விமானம் பறப்பு

முல்லைத்தீவில் நேற்றும் நேற்று முன்தினமும் காலை 9.00 மணி தொடக்கம் 10.30 மணி வரை சிறிலங்காவின் வேவு விமானம் கடற்கரைப் பக்கமாக பறந்ததை அவதானிக்க முடிந்தது. இதனால் கடற்கரையில் நின்ற மக்கள் பெரும் பதற்றத்துடன் காணப்பட்டனர். (20)

### கண்டெடுப்பு

முள்ளியவளை பிரதான வீதியில் இருந்து தேசியஅடையாள அட்டை ஒன்று கண்டெடுக்கப்பட்டு முள்ளியவளை பிரதான வீதியில் அமைந்துள்ள புனிதன் பல்பொருள் வாணிபத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவ்வடையாள அட்டையில் பொன்னம்மா வேலன், துன்னாலை தெற்கு என உள்ளது. உரியவர் வந்து மேற்படி வாணிப நிலையத்தில் பெற்றுக்கொள்ளவும். (ஆ)

### அரசியல் கருத்தரங்கு

விசுவமடு பாரதிபுரத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சமகால அரசியல் கருத்தரங்கு நடைபெற்றுள்ளது. பாரதிபுரம் முன்பள்ளி மைதானத்தில் பாரதிபுரம் ஊரக தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில்,

கருத்துரைகளை விசுவமடுப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.செழியன், விசுவமடு ஊரக வளர்ச்சிப்பணிப் பொறுப்பாளர் அன்பு, விசுவமடு வலயப் பொறுப்பாளர் ஜெயம் ஆகியோர் ஆற்றினர்.

இதில் மக்களது பிரச்சினைகள், நிர்வாகங்கள், தே.எ.பேரவையின், எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

### வருடாந்த பெருவிழா

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மாயவனூர் மம்மில் குளக்கரை சிறிரங்கநாதப் பெருமாள் கோவில் வருடாந்தப் பெருவிழா வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. 20ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மாலை உறியடி உற்சவமும், 21ஆம் திகதி தீர்த்தமும், 22ஆம் திகதி பூங்காவனமும் நடைபெறும். (12)

## மூன்று குடிநீர்க் கிணறுகள் மக்களிடம் கையளிப்பு

வன்னி அபிவிருத்திக்கு துணைபுரியும் அமைச்சின் அனுசரணையுடன் கரைதுறைபற்று பிரதேச சபையினரால் 2002ஆம் ஆண்டிற்கான திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு கள்ளப்பாடு தெற்கில் மீனவர்களின் நலன்கருதி அமைக்கப்பட்ட கிணறும், கள்ளப் பாடு மாதிரிக் கிராம மக்களின் குடிநீர் வசதியைக் கருதி அமைக்கப்பட்ட இரு கிணறுகளும் பிரதேச சபை விசேட ஆணையாளர் க.இராசையாவினால் நேற்று முன்தினம் மாலை 3.30 மணிக்கு மக்களின் பாவனைக்காக கிராம அலுவலரிடமும், மக்களிடமும் கையளிக்கப்பட்டது. (20)

## - பிரமந்தனாறு மகா வித்தியாலய -
## மாடிக்கட்டடம் ஆய்வுகூடத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவம்

கிளி.பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தில் இரண்டு மாடிக்கட்டடமும், விஞ்ஞான ஆய்வுகூடமும், செய்முறை கூடமும் நிகோட் நிறுவனத்தால் அமைக்கப்படவுள்ளன. இதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் க.ச.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது. நண்பகல் 12.00 மணியளவில் மாடிக்கட்டடத்திற்கான அடிக்கல்லை கிளி.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் நாட்டி வைத்தார். விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கான அடிக்கல்லைப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ம.பத்மநாதன் நாட்டிவைத்தார். இந்நிகழ்வில் விசுவமடுப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.செழியன், கண்டாவளை கோட்டக்கல்வி அலுவலர் வி.சிற்றம்பலம், அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (14)

## முள்ளியவளை தமிழ் வி.யில் கணித, சங்கீத ஆசிரியர் இல்லை

முள்ளியவளை தமிழ் வித்தியாலயத்தில் நீண்ட காலமாக சங்கீதம், நடனம், கணிதம் ஆகிய பாட ஆசிரியர்கள் இல்லாமையினால் மாணவர்கள் பின்தங்கிய நிலையில் உள்ளனர்.

நடைபெற்று முடிந்த 2ஆம் தவணைப் பரீட்சையில் மேற்படி பாடங்களில் மாணவர்கள் சித்தியடையாத நிலையை அவதானிக்க முடிந்தது. இம்மாணவர்களின் அவலத்தைக் கருத்திற் கொண்டு வித்தியாலய அதிபர் சு. வீரசிங்கம் அவர்களால் தற்காலிக தொண்டர் ஆசிரியர் ஒருவரை நியமித்த போதிலும் கல்வி சீர்திருத்த சட்டத்தின் கீழ் பயிற்றப்பட்ட ஆசிரியரினால் கற்பித்தல் மேற்கொள்ளாமையானது பரீட்சையில் தெளிவாக தெரிகின்றது.

தரம் 01 தொடக்கம் தரம் 09 வரையான வகுப்புக்களைக் கொண்ட இவ்வித்தியாலயத்தில் தொடர்ச்சியாக ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## உலக உணவுத் திட்டத்தின் கீழ் வீதிகள் புனரமைப்பு

உலக உணவுத்திட்டத்தின் கீழ் கரைதுறைப்பற்று பிரதேச சபையினரின் ஒழுங்குபடுத்தலில் முள்ளியவளை செங்குந்தா வீதி (மேஜர் பசீலன்வீதி) 4ஆம் குறுக்குத்தெரு புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதனன்று ஆரம்பமான மேற்படி புனரமைப்பு வேலைகளில் சுமார் 150க்கும் மேற்பட்ட அப்பகுதி மக்கள் பங்களித்துள்ளமையை அவதானிக்க முடிந்தது.

மேற்படி தெருவானது 1983ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் போது வெள்ளத்தால் அரிக்கப்பட்டு அன்று தொடக்கம் இதுவரை காலமும் குன்றும்குழியுமாகவும், ஆறு போலவும், மணல் மேடாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பிப்போரின் கவனத்திற்கு

(வவுனியா செய்தியாளர்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆசிரியப் பயிலுனர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்களை மனிதவள, கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு கோரி உள்ளது.

2001,2002ஆம் ஆண்டுகளில் க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத் தகைமைகளைப் பெற்ற 25 வயதிற்குட்பட்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கமுடியும்.

தேசிய கல்வியியற்கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்கும்போது கையாள வேண்டிய நுட்பமுறைகள் தொடர்பாக விண்ணப்பதாரிகளுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் ஒன்று வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் இம்மாதம் நடுப்பகுதியில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் கலந்து கொள்வதன் மூலம் விண்ணப்பதாரிகள் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகும் என்பதால் விண்ணப்பிக்க விரும்புவோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டபின் விண்ணப்பிக்குமாறு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி திரு.க.பேர்ணாட் அவர்கள் அறிவித்துள்ளார். (10)

# இஸ்ரேலியப் படையினர் அதிரடித் தாக்குதல் கமாஸ் தீவிரவாதிகள் நால்வர் பலி!

## -சமாதான முயற்சிகளுக்குப் பின்னடைவு

பலஸ்தீனத்தின் மேற்குக்கரை நேப்ளஸ் நகரில் அமைந்துள்ள அகதிமுகாம் ஒன்றின் மீது இஸ்ரேலியப் படையினர் நடாத்திய தாக்குதலில் நான்கு கமாஸ் இயக்கப் போராளிகள் கொல்லப்பட்டனர்.



அகதி முகாம் பகுதியில் ஹமாஸ் போராளிக்கும் இராணுவத்துக்குமிடையில் நடைபெறும் துப்பாக்கிச் சமரில் ஏற்பட்ட புகை மண்டலம்

அங்கு இடம்பெற்ற பதில் தாக்குதலில் இஸ்ரேலியப் படைவீரர் ஒருவரும் கொல்லப்பட்டார்.

இந்தத் தாக்குதலால் ஒரு மாதத்திற்கு முன்னர் அமுல் செய்யப்பட்டிருந்த யுத்தநிறுத்தத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதுடன் கமாஸ் இயக்கத் தலைவர்கள் பழிக்குப் பழி நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் சூளுரைத்துள்ளனர்.

இச் சம்பவத்தையடுத்து மேற்குக் கரைப் பகுதியில் பலஸ்தீனர்கள் இஸ்ரேலியர்களுக்கு எதிராகக் கோஷமிட்டனர். கமாஸ் அமைப்பைச் சேர்ந்த போராளிகள் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டதால் தான் தாங்கள் இந்தத் திடீர்த் தாக்குதலை நடத்த நேர்ந்தது என்று இஸ்ரேலிய இராணுவத் தளபதி ஒருவர் தெரிவித்தார். இதற்கு விரைவில் பதிலடி கொடுப்போம் என்று பலஸ்தீனர்கள் கூறியிருப்பதால் மத்திய கிழக்குப் பகுதியில் மீண்டும் பதட்டம் ஏற்பட்டுள்ளது.

# ரஷ்ய விண்வெளி வீரரின் விநோத காதல் திருமணம்

ரஷ்யாவைச் சேர்ந்த விண்வெளி வீரர் ஒருவர் விண்வெளியில் இருந்தபடியே பூமியிலுள்ள தனது காதலியைத் தொலைபேசி மூலம் திருமணம் செய்து புதிய சாதனை ஒன்றை இன்று படைக்கவுள்ளார்.

ரஷ்ய விண்வெளி வீரரான யூரிமல்லென்ஸ்கோ தற்பொழுது பூமியிலிருந்து 380 கிலோமீற்றர் உயரத்திலுள்ள சர்வதேச விண்வெளி மையத்தில் ஆராய்வுப் பணிகளை மேற்கொண்டுள்ளார்.

ஓராண்டுக்கும் மேலாக அவர் விண்வெளியில் இருப்பதால் அமெரிக்காவைச் சேர்ந்த தனது காதலி எச்சரினாடிமிக்கிறியேவைத் திருமணம் முடிப்பது தள்ளிக்கொண்டே போனது.இனியும் காத்திருக்க முடியாது என்று முடிவு செய்த அந்தக் காதல் ஜோடிகள் இருந்த இடத்திலிருந்தே திருமணம் செய்ய முடிவு செய்துள்ளனர். அதன்படி இன்று காலை செய்மதித் தொலைத் தொடர்பு மூலம் தொடர்பு கொள்ளவுள்ள அவர்கள் தொலைபேசி மூலமாகவே திருமணம் செய்துகொள்ளவுள்ளனர்.

# பேச்சுக்களை விரைவுபடுத்த வாஷிங்டனில் ஆலோசனை

(வாஷிங்டன்)

அமெரிக்கா,ஜப்பான், தென்கொரியா ஆகியவற்றின் ராஜதந்திரிகள் எதிர்வரும் 13, 14 ஆம் திகதிகளில் வாஷிங்டனில் கூட்டமொன்றை நடத்தவுள்ளனர்.

வடகொரியாவின் சந்தேகத்திற்கிடமான அணுவாயுத திட்டங்கள் குறித்த நெருக்கடி பற்றிய கூட்டம் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை ஒழுங்கு செய்யும் கூட்டமே நடைபெறவுள்ளது.

06 நாடுகள் கலந்து கொள்ளும் பேச்சு வார்த்தையை முன்னதாகவே நடத்துவதற்கு சம்பந்தப்பட்ட நாடுகள் விரும்புவதாகத் தெரிகின்றது.

# ஐந்து சதவீத காடுகள் அழிவு!

போர்த்துக்கல்லில் பல இடங்களில் பரவிவரும் காட்டுத்தீ காரணமாக இதுவரை 15பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் நாட்டிலுள்ள காட்டு வளத்தில் 5 சதவீதமானவை முற்றிலும் எரிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# அமெரிக்க மக்கள் பொறுமை காக்க வேண்டும்; ஈராக்கில் மெதுவாகவே முன்னேறி வருகின்றோம்

## - நூறாவது நாள் நிறைவில் புஷ் கருத்து

(வாஷிங்டன்)

**ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படைகள் மெதுவாக ஆனால் உறுதியாக ஈராக் தீவிரவாதிகளை அழித்து வருகின்றனர் என்று அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவித்துள்ளார். டெக்ஸாஸ் மாகாணத்தில் கிராபூட் நகரில் நேற்று முன்தினம் செய்தியாளர்களின் மத்தியில் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.**



மேலும் இதுபற்றி அவர் தெரிவிக்கையில், அமெரிக்கப் படையினர் மீது தாக்குதல் நடத்தி வரும் ஈராக்கியர்கள் மீது பதில் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகிறது என்றார்

அமெரிக்க மக்கள் பொறுமையாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்ட சனாதிபதி புஷ் எவ்வளவு காலத்துக்கு அமெரிக்கத் துருப்புகள் ஈராக்கில் நிலைகொண்டிருக்கும் என்பது குறித்தோ 2005ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் ஈராக்கிற்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்படும் என்றோ அவர் எதனையும் கூறவில்லை.

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினர் மீதான ஈராக்கியர்களின் நாளாந்த தாக்குதலில் இதுவரை 55பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, அமெரிக்கப் படையினர் ஈராக்கை கைப்பற்றி நேற்று முன்தினத்துடன் நூறுநாட்கள் முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



நாணயமாற்று நிறுவனம் ஒன்றில் காட்சிக்கு வைக்கப்பட்டு வகைப்படுத்தப்பட்டுள்ள ஈராக்கிய டினார். இதில் சதாம் ஆட்சியிலும் அதன்பின் தற்போது புழக்கத்திலுள்ளதுமான நாணயத்தாள்கள் உள்ளன.

# பாராளுமன்றில் பெரும்பான்மை பலமில்லை; கோவில் கட்டும் சட்டத்திற்கு வழியில்லை

## - இந்திய துணைப்பிரதமர் ஆதங்கம்

(புதுடில்லி)

அயோத்தியில் இராமர் கோவில் கட்ட சட்டம் கொண்டுவர வேண்டும் என்ற விஸ்வஹிந்து பரிசத்தின் கோரிக்கையை இந்திய துணைப்பிரதமர் எல்.கே.அத்வானி நிராகரித்துள்ளார். அயோத்திக்காக அரசைதியாகம் செய்ய முடியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹைதராபாத் செல்லும் வழியில் விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்து, முஸ்லிம்களிடையே உடன்பாடு ஏற்பட்டால் தான் அயோத்தி பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் எனக் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இல்லாததால் அயோத்தியில் இராமர் கோவில் கட்ட சட்டம் கொண்டுவரமுடியாது என திட்டவட்டமாக கூறுகிறேன்.

தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகள் மட்டுமன்றி எதிர்க்கட்சிகளிடையேயும் ஒருமித்த கருத்துக்கள் ஏற்பட்டால் மட்டுமே இத்தகைய சட்டத்தை அரசு கொண்டுவரும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இராமர் கோவில் கட்டும் விவகாரத்தில் பிரதமரும், துணைப்பிரதமரும் தெரிவித்த கருத்துக்களால் எதிர்க்கட்சிகள் எதிர்ப்பினை வெளிப்படுத்தி வருகின்றமை தெரிந்ததே.

# இந்தியா நல்லெண்ணக்குழு பாகிஸ்தான் பயணமானது

(புதுடில்லி)

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நல்லுறவை உருவாக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக பாராளுமன்ற உறுப்பினர்கள் பத்திரிகையாளர்கள்,பல்துறை வல்லுநர்கள் ஆகியோர் அடங்கலான நல்லெண்ணத் தூதுக்குழு புதுடில்லியிலிருந்து நேற்று பாகிஸ்தான் புறப்பட்டுச் சென்றது.

மூன்று நாட்கள் பயணமாகச் சென்றுள்ள இக்குழுவில் ராஜீய ஜனதாதளத் தலைவர் லாலுப் பிரசாத் யாதெவ், லோக் ஜெனசக்தித் தலைவர் ராம் ஷிலாவ் பாஸ்வான் மற்றும் மார்கிரட்அல்வா, மணிசங்கர் ஐயர், பாரதிய ஜனதாக் கட்சியின் பல்கிவ் புன்ஞ் ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர்.

பாகிஸ்தான் சனாதிபதி ஜெனரல் பர்வேஷ் முஷாரப் உள்ளிட்ட மூத்த தலைவர்களை இவர்கள் சந்தித்துப் பேசவுள்ளனர்.

# வடக்கு இஸ்ரேலின் அமைதிக்கு பங்கம்; ஹிஸ்புல்லாக்கள் தாக்குதல் அதிகரிப்பு!

## - ஐ.நா.வில் ஷெரோன் அரசு முறையீடு

(டெல்அவிவ்)

தெற்கு லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா கொரில்லாக்கள் இஸ்ரேலின் வடபகுதியில் தாக்குதலை நடத்துவதனால் அந்தப்பிராந்தியத்தின் அமைதி நிலை சீர் குலைந்திருப்பதாக ஐக்கிய நாடுகள் தாபனத்துக்கு இஸ்ரேல் நேற்று முறைப்பாடு செய்துள்ளது.



இஸ்ரேல் –லெபனான் எல்லையில் லெபனான் ஹிஸ்புல்லா முன்னணியினரை நோக்கி இஸ்ரேலியப்படையினரால் நடத்தப்படும் ஆட்டிலரி தாக்குதல்

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்துக்கு இஸ்ரேலிய தூதுவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் சில நாட்களுக்கு முன்னர் ஹிஸ்புல்லாக் கிளர்ச்சியாளர்கள் வேண்டுமென்றே நடத்திய தாக்குதல் மூலம் அமைதிநிலை சீர் குலைக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளது.

22 ஆண்டுகள் தெற்கு லெபனானை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த பின்னர் இஸ்ரேலிய படைகள் 2000 ஆண்டு லெபனானை விட்டு வெளியேறின என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலியக் கடிதத்தின் ஒரு பிரதி சிரியப் பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஐ.நா சபையின் ஆகஸ்ட் மாதத் தலைவராக சிரியத்தூதுவர் இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாராளு. உறுப்பினருக்கு இரு மெய்க்காப்பாளர்; கைத்துப்பாக்கிகளை மீளப்பெற நடவடிக்கை

-சனாதிபதியிடமும் ஆலோசனை பெறப்படும்

**பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 225 ரிவோல்வர் துப்பாக்கிகளை அரசு மீளப் பெற உத்தேசித்துள்ளது. இவர்களுக்கு தலா இரண்டு மெய்க்காப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளதையடுத்து மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதெனச் சிறிலங்கா உள்துறை அமைச்சுத் தெரிவிக்கிறது.**

வேலைவாய்ப்பு, தொழில்துறை அமைச்சரும் ஆளும் கட்சி பிரதான அமைப்பாளருமான அலவி மௌலானாவின் கையில் நடத்திய பேச்சுக்களின் விளைவாக அரசு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

இவர்களுக்கு கைத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டு இருப்பதால் அண்மையில் பாராளுமன்றத்தில் ஏற்பட்ட பாதுகாப்புப் பிரச்சினைகள் பா.உறுப்பினர்களின் அடாவடி நடவடிக்கைகள் என்பன அரசுக்குப் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளதாக அமைச்சர் சமரசிங்க ரணிலிடமும் ஏனைய அமைச்சர்களிடமும் சுட்டிக்காட்டியதைப்படுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை அனுமதி கிடைத்ததை அடுத்துச் சனாதிபதியிடம் இது பற்றி ஆலோசிக்கப்பட்ட பின் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் மேற்படி துப்பாக்கிகளை மீளப்பெறும் நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளன. துப்பாக்கிகள் மிக அவசியம் எனக் கருதுமிடத்து அதற்கான காரணத்தை எழுத்து மூலமான விண்ணப்பத்தை உட்துறை அமைச்சிடம் கையளித்தபின் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தகுந்த சரியான காரணம் தெரிவிக்கப்படாதவிடத்து விண்ணப்பம் ரத்துச் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## விவசாயிகளுக்கு இரு நாள் பயிற்சி

ஹோரூட் நிறுவனத்தின் நிதி உதவியுடனும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முள்ளியவளைப் பிரதேச செயலகத்தின் அனுசரணையுடனும் கமநல சேவைத் திணைக்களத்தினால் கடந்த 01 ம,02ம் திகதிகளில் முள்ளியவளைப் பிரதேசக் கமக்காரர் அமைப்புக்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு இரண்டு நாள் பயிற்சி நடாத்தப்பட்டது. (26)



மட்டக்களப்பு நகரிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகம் மீதான கைக்குண்டுத் தாக்குதலின் போது சேதமடைந்த வாகனத்தையும் அலுவலகத்தையும் காண்க.

# கிளிநொச்சியில் ஜப்பான் மருத்துவக் குழுவின் நடமாடும் சேவைக்கு நிதியளிப்பு

-வவுனியாவில் மருத்துவ சேவை நிறுத்தம்

ஜப்பான் மருத்துவக் குழுவினர் வவுனியா மாவட்டத்தில் கடந்த 5 மாத காலமாக நடத்திவந்த நடமாடும் மருத்துவ சேவை இம்மாதம் 15 ஆம் திகதியுடன் நிறுத்தப்படவுள்ளது.

கோவில் குஞ்சுக்குளம், கனகராயன்குளம், வீரபுரம், சுசாங்குளம், மகாகச்சகொடி ஆகிய கிராமங்களில் இவர்களின் நடமாடும் சேவை நடைபெற்று வந்தது.

இதேவேளை கிளிநொச்சிப் பகுதியிலும் நடமாடும் மருத்துவ முகாங்களை நடத்துவதற்கு நிதி கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியாவில் நடமாடும் சேவைக்கு ஜப்பான் வெளிவிவகார அமைச்சு நிதி உதவியளித்து வந்தது. ஆனால் அந்த நிதி ஒதுக்கீடு நிறுத்தப்பட்டதால் இச் சேவையை நிறுத்துவதற்கு இவர்கள் முடிவு செய்துள்ளனர் என வவுனியா மாவட்டச் சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஏ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

## ஊரக தேசிய எழுச்சிப் பேரவை தெரிவு

துணுக்காய் பிரதேசத்தில் கிராமப் பிரிவில் தேசிய எழுச்சிப் பேரவை தெரிவு அண்மையில துணுக்காய் அ.த.க பாடசாலை மண்டபத்தில் கிராமசேவையாளர் சி.சண்முகநாதன் தலைமையில் இடம்பெற்றது.

ஊரக தேசிய எழுச்சி பேரவை தொடர்பான கருத்துக்களை துணுக்காய் பிரதேச பொறுப்பாளர் சி.சேரன் பெருமாள் ஆகியோர் வழங்கினார்கள்.

தொடர்ந்து ஊரக தேசிய எழுச்சிப் பேரவைத் தெரிவு இடம்பெற்றது. செயலாளராக சு.ரஜீஸ்குமார், துணைச் செயலாளராக வ. மார்க்கண்டு, பொருளாளராக க.சந்திரகுமார் உறுப்பினர்களாக ம. பதமநாதன், ஜே தவயோகமலர், ர. ரதிணாஞ்சலி, கு. சாந்தகுமார், சோ. கிருஸ்ணசாமி, அ. பராசசிங்கம ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## விரிவுரைகள் 12-ல் ஆரம்பம்

கிழக்கு பல்கலைக்கழகத்தின் 2002 - 2003 கல்வியாண்டிற்கான இரண்டாம் ஆண்டிற்கான விரிவுரைகள் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகுமென பதில் துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.

விடுதி மாணவர்களை விரிவுரைத் தினத்திற்கு முன்னர் விடுதிகளுக்கு வருமாறு அவர் மேலும் கூறியுள்ளார். இம்மாதம் 04 ஆம் திகதி விரிவுரைகள் ஆரம்பமாகுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் பின்னர் அது பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறார்களின் விளையாட்டு விழா

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் முல்லை அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் முள்ளியவளை சரஸ்வதி முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா நிகழ்வு கடந்த புதனன்று மாலை 3.00 மணிக்கு முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வினைத் தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்று முடிவில் பரிசில்கள் வழங்கப்பட்டன. இந் நிகழ்வுக்கான சிறப்புரையினை முள்ளியவளை றோ.க.த.க. பாடசாலை அதிபர் ந.இளஞ்சிங்கநாதன் நிகழ்த்தினார். (ஆ)

-வவு.வடக்குப் பிரதேச சபையின்-

# உள்ளூராட்சி வாரப் போட்டிகளில் பரிசில் பெற்ற மாணவர் விபரம்

வவுனியா வடக்கு பிரதேச சபையினால் ஜூலை 14-20ஆம் திகதி வரை உள்ளூராட்சி வார நிகழ்வுகள் பிரதேச மட்டத்தில் கொண்டாடப்பட்டது. கனகராயன்குளம், நெடுங்கேணிப்பிரதேசத்தில் மரநடுகை,நெடுங்கேணிப் புரம்,மகிளவெளிப் புலம் புதுவிளாங்குளம், ஆனைக்குளம்வீதி சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

இறுதி நாள் நிகழ்வு கடந்த 19ஆம்திகதி விசேட ஆணையாளர் க. தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராக வவுனியா பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் பிரதிநிதியாக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் க.சிவஞானம், கௌரவ விருந்தினராக நிர்வாக சேவைப் பிரதிநிதி ஜேம்சன் அத்துடன் பிரதேச சபைச் செயலாளர் க.பரந்தாமன் மற்றும் சக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். தொடர்ந்து சிறப்பம்சமாக மாணவ மாணவிகளின் சுற்றுச் சூழல் தொடர்பான கலை நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன் கட்டுரைப்போட்டியிலும் சித்திரப் போட்டியிலும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

மேற்பிரிவு சித்திரப்போட்டி 1ஆம் இடம் மனமதராஜ நெடுங்கேணி மகா வித்தியாலயம் ,2ஆம் இடம் அ.பிரதீபன் நெடுங்கேணி மகா வித்தியாலயம் 3ஆம் இடம் க.ரஜீபன் சின்னப்பூவரசங்குளம் விக்கினேஸ்வரா வித்தியாலயம்.

கீழ்பிரிவு சித்திரப்போட்டி 1ஆம் இடம் பா.மிதுலன் நெடுங்கேணி மகா வித்தியாலயம் 2ஆம் இடம் சு.டேஸ் கரன் மாறாவிலுப்பை அ.த.க.பாடசாலை, 3ஆம் இடம் கோ.புஸ்பராஜா மாறாவிலுப்பை அ.த.க பாடசாலை

மேற்பிரிவு கட்டுரைப்போட்டி 1ஆம் இடம் பு.திருக்குமாரத்தி புளியங்குளம் இந்துக்கல்லூரி, 2ஆம் இடம் அ. விஜிதா சின்னடம்பன் பாரதி வித்தியாலயம் , 3ஆம் இடம் பிருந்தா புளியங்குளம் இந்துக் கல்லூரி

கீழ்பிரிவு கட்டுரைப்போட்டி 1ஆம் இடம் கும்ராசின்னடம்பன் பாரதி வித்தியாலயம் , 2ஆம் இடம் ப.தாசினி சின்னபூவரசங்குளம் விக்கினேஸ்வரா வித்தியாலயம்,3ஆம் இடம் சி.சரிதா மாறாவிலுப்பை அ.த.க.பாடசாலை.

# பொதுச் சந்தை அமைக்க அனுமதித்தும் அதற்கான நடவடிக்கைகள் இல்லை!

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேசத்தில் உள்ள வற்றாப்பளைக் கிராமத்தில் பொதுச் சந்தையின்றி அப்பகுதி மக்கள் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர்.

1250 க்கும் மேற்பட்ட குடும்பங்களைக் கொண்ட அக்கிராமத்தில் பொதுச் சந்தை இல்லாமையால் சுமார் 3 கி.மீ தூரத்திலுள்ள முள்ளியவளைப் பொதுச் சந்தைக்கும் தண்ணீரூற்றுப் பொதுச் சந்தைக்கும் சிரமத்தின் மத்தியில் சென்று வருகின்றனர்.

இப்பகுதியில் பொதுச் சந்தை அமைப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்ட போது அதற்கான காணி இல்லாமையாலேயே தாமதமாகி வருகின்றது எனவும் அப்பகுதி மக்களும் கிராம சேவையாளர்களும் முயற்சி எடுத்துக் காணி கிடைக்குமானால் உடன் சந்தை அமைக்க முடியும் என கரை துறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் செ.காசிப்பிள்ளை நிகழ்வொன்றில் கலந்து உரையாற்றும் போது தெரிவித்துள்ளார். (ஆ)

## முதுபெரும் பத்திரிகையாளர் சிவகுருநாதன் மறைவு

(கொழும்பு)

முதுபெரும் பத்திரிகையாளரும் சட்டத்தரணியும், தினகரன் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியருமான ஆர்.சிவகுருநாதன் நேற்று அதிகாலை காலமானார்.

70 வயதான ஆர். சிவகுருநாதன் தினகரன் பத்திரிகையில் 34 வருடம் பிரதம ஆசிரியராகப் பணியாற்றினார்.

அதில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் இறக்கும் வரை கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவராகச் சேவையாற்றியுள்ளார். இறுதிக் கிரியைகள் இன்று மாலை பொரளை கனத்தை மயானத்தில் நடைபெறும்.

# நெற்பயிரின் சிறப்பான விளைச்சலுக்கு நாகசத்தும் இன்றியமையாததொன்று!

ஒட்டுசுட்டான் விவசாய போதனாசிரியர்

நெல்லின் சிறப்பான வளர்ச்சிக்கும் அதிக விளைச்சலுக்கும் பதினாறு வகையான மூலகங்கள் அவசியம். இதில வயல்களில நாகசத்து குறைவடைந்து வருவதால் இதனை நிவர்த்திக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என ஒட்டுசுட்டான் விவசாய போதனாசிரியர் தெரிவித்துள்ளார்.

அவர் இது பற்றி தெரிவித்துள்ளதாவது,

காலம் காலமாக நைதரசன், பொசுபரசு, பொட்டாசியம் ஆகிய மூன்று மூலகங்களை மாத்திரமே செயற்கையாக வழங்கி வருகின்றோம். ஏனைய மூலகங்கள் பயிருக்கு குறைந்த அளவிலேயே தேவைப் படுவதால் அவற்றை அம்மண்ணில இருந்தே பயிர்பெற்றுக்கொள்கின்றது. எனினும் ஒரே இடத்தில் தொடர்ச்சியாக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால் மண்ணில் இம்மூலகங்களின் அளவும் குறைந்து விட்டதாக அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் நெற்பயிரின் இலைகள் நரம்புகள் வெளிறி இலைகள் வெண்கல நிறமாகி மஞ்சள் நிறமடைந்து பலவீனமடைவதுடன் தானிய உற்பத்தி, தானிய முதிர்ச்சி என்பனவும் பாதிக்கப்பட்டு விளைச்சல் வெகுவாகக் குறைகின்றது.

இக்குறைபாட்டு அறிகுறிகளை அவதானிக்கும் பல விவசாயிகள் உடனடியாகவே கிருமி நாசினிகளை விசிறி மேலதிகமான செலவு ஒன்றை உருவாக்கிக் கொள்வதுடன் எந்தப்பலனையும் பெற்றுக் கொள்வதில்லை. இதற்குத் தீர்வாக நான்காவது மூலகமாக நாகத்தினையும் பசளை மூலம் செயற்கையாக வழங்கவேண்டிய கட்டாய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

இதற்காக வருடத்திற்கொரு தடவை ஏக்கர் ஒன்றிற்கு இரண்டு கிலோ கிராம் நாக சல்பேற் (சிங்சல்பேற்)இனை அடிக்கட்டு பசளையுடன் கலந்து பாவிக்கும்படியாக வேண்டப்படுகின்றீர்கள். எக்காரணம் கொண்டும அளவுக்கதிகமாக நாக சல்பேற்றை இட வேண்டாம். ஏனெனில் மேலதிக நாக போசனை ஆனது பொசுபரசு, இரும்பு போன்ற போசனைச் சத்துக்கள் அகத்துறிஞ்சப்படுவதை தடுக்கும் தன்மையுடையது என விவசாயப் போதனாசிரியர் தெரிவித்தார்.(26)

# சிரமதானப் பணி மூலம் பாலம் புனரமைப்பு

வட்டக்கச்சி ஜொனி புரத்தில் சேதமடைந்த பாலம் ஒன்று புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. வட்டக்கச்சிப் பிரதேச அரசியல் துறையினரின் ஒழுங்குபடுத்தலில் மாவடி வலயப் பொறுப்பாளர் இராமஜெயம் தலைமையில் சேதமடைந்திருந்த பாலத்தினை அப்பகுதி மக்கள் அனைவரதும் ஒன்றிணைந்த முழுநேர சிரமதானப் பணிமூலம் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

புளுதி ஆற்று நீர் ஓடும் பகுதியிலேயே இப்பாலம் நீண்ட நாட்களாகச் சேதமடைந்திருந்தது. மக்கள் இறங்கியே செல்லவேண்டிய நிலை காணப்பட்டது. தற்போது, சிறப்பாக தண்டவாளம்,சிலுப்பர்க்கட்டை என்பன மூலம் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. (12)

# பிந்துனுவெவ வழக்கில் பொய்ச்சாட்சியம் அளித்த நபர்களுக்கு 28-ல் தீர்ப்பு

(கொழும்பு)

**பிந்துனுவெவ படுகொலை வழக்கில் பொய்ச்சாட்சியமளித்தவர்களுக்கு எதிராக கொழும்பு மேல்நீதிமன்றம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இவர்கள் தொடர்பான தீர்ப்பு இம்மாத இறுதியில் வழங்கப்படவுள்ளது.**

படுகொலை வழக்கில் பொய்ச் சாட்சியமளித்த குற்றத்திற்காக குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கான தீர்ப்பு எதிர்வரும் 28 ஆம் திகதி வழங்கப்படும் என கொழும்பு மேல் நீதி மன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய தெரிவித்தார்.

இவ்வழக்கு விசாரணை நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ட்ரயல் அட்பார் முறையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பொய்ச்சாட்சியமளித்ததற்கான காரணத்தைத் தெரிவிக்கும்படி நீதிபதி தெரிவித்ததுடன் பொய்ச் சாட்சியமளித்தவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் அதற்கான காரணங்களையும் தெரிவித்துள்ளார்கள்.

கடந்த இரண்டாயிரமாம் ஆண்டு அக்டோபர் 25ம் திகதி பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க்கைதிகள் மீது நடத்தப்பட்ட கொடூர தாக்குதலில் 27 அப்பாவி தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டமை தெரிந்ததே.

## பணம் வைத்துச் சூதாடிய அறுவர் நெல்லியடியில் கைது

வடமராட்சியின் ராஜகிராமம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் பணம் வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்ட ஆறுபேரை நெல்லியடி பொலிசார் கைது செய்துள்ளனர்.

அப்பகுதியில் உள்ள பொதுசன கட்டடம் ஒன்றில்இவர்கள் பணத்தை வைத்து விளையாடிக் கொண்டிருந்ததாகவும் இது தொடர்பாக பொலிசாருக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் பேரில் திடீர் சோதனையை மேற்கொண்ட பொலிசார் இவர்கள் ஆறுபேரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஆறுபேரும் நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டபோது இவர்களை தலா 3000ருபா தண்டப்பணம் செலுத்தி வீடு செல்ல நீதவான் அனுமதித்தார். (27)

## பூநகரி - மன்னார் வீதியில் விபத்தில் சிக்கியவர் காயம்

பூநகரி மன்னார் வீதியில் இடம் பெற்ற துவிச்சக்கரவண்டி மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளானார். இந்தச் சம்பவம் கடந்த புதனன்று பிற்பகல் 4.30 மணியளவில் இடம் பெற்றது.

துவிச்சக்கர வண்டியில் பயணித்த சிவகரன் என்பவர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் சாமிப் புலம்தியாகதீபம் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டார்.(34)

## உரிமை மீறல்கள் குறித்து
# தாய்லாந்துப் பிரதமருக்கு பொ.ஐ.முன்னணி அறிக்கை

(கொழும்பு)

அரசாங்கம் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்கள் குறித்து எதிர்வரும் 15ஆம்திகதி தாய்லாந் துப்பிரதமர் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தும் பொழுது அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கப் போவதாக பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொலிஸ் நிலையத்துக்குள் சென்று பொலிசாரைத் தாக்கிக் காயப்படுத்துகின்றனர். ஆனால் பிரதமரோ சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகையால் இது போன்ற சம்பவங்கள் அதிகரிக்கின்றன. கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் பொதுசன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் கொல்லப்பட்டனர். வீடுகள் எரிக்கப்பட்டன. ஆனால் இதுவரை நட்டஈடு எதுவும் வழங்கப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

# ரூ.20 இலட்சம் பெறுமதியுடைய ஹெரோயினுடன் இருவர் கைது!

## ஒருவர் இந்தியப் பிரஜை

(மன்னார்)

மன்னார் நகரில் வியாழக்கிழமை காலை 20 இலட்சம் ருபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருட்களுடன் இருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மயானத்துக்கு அருகில் வைத்தே வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிசார் 500 கிராம் ஹெரோயின் போதைப் பொருட்களைக் கண்டு பிடித்ததுடன் சந்தேக நபர் இருவரையும் கைது செய்துள்ளனர். இவர்களில் ஒருவர் இந்தியப் பிரஜையெனவும் தெரியவருகிறது.

கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட பின்னர் போதைப் பொருள் தடுப்புப்பணியகப் பொலிசாரிடம் ஒப்படைக்க கொழும்புக்கு அழைத்து வரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# 3 வயதுச் சிறுமியிடம் ஹெரோயின் மீட்பு!

மூன்று வயதுச் சிறுமியின் ஆடைக்குள் ஹெரோயின் போதைப் பொருள் பக்கற்றுக்களை மறைத்து விற்பனை செய்த இளம் தாயாரைக் கண்டிப் பொலிசார் கைது செய்துள்ளனர்.கண்டி ரயில் நிலையத்திற்கு அருகே இந்த மூன்று வயதுக் குழந்தையைப் பயன்படுத்தி ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டிருந்தபோதே 30 வயதுடைய இளம் தாயார் பொலி சாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# ஆனமடுவவில் மாயமான துப்பாக்கி தப்பியோடிய சிப்பாயிடமிருந்து மீட்பு!

ஆனமடுவ பகுதியில் கடந்த மாதம் 27 ஆம் திகதி பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரிடமிருந்து அபகரிக்கப்பட்ட துப்பாக்கியை வெள்ளிக்கிழமை பொலிசார் மீட்டுள்ளனர்.

ஆனமடுவ பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிளிடம் இருந்த துப்பாக்கியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அபகரித்துச் சென்றிருந்தனர்.

ஆனமடுவ-பெரியகுளம் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் இருந்து துப்பாக்கியை மீட்டதுடன் இருவரையும் பொலிசார் கைது செய்துள்ளனர். இந்த இருவரில் ஒருவர் இராணுவத்திலிருந்து தப்பிவந்தவர் என்று தெரியவருகிறது.

இத்துப்பாக்கியை வைத்து மூன்று கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாகவும் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்காயத்துக்கு இலக்காகி காயமடைந்து அனுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளார்கள்.

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முதுமானி பட்டப் பாடநெறி

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக் கழகத் தில் விவசாய விஞ்ஞான முதுமாணிப் பட்டப்பாடநெறி ஆரம்பிக்கப்பட வுள்ளதாக விவசாய பீடாதிபதி கலாநிதி எஸ். ரவீந்திரநாத் தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட வுள்ள இப்பாடநெறி ஒருவருடக் கற்கை நெறியாகும் எனவும் வார இறுதி நாட்களில் இதற்கான வகுப்புக்கள் நடைபெறுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உணவு, விஞ்ஞானம், உணவுத் தொழில் நுட்பம் ஆகிய தலைப்புக்களில் நடைபெறவுள்ள இக்கற்கை நெறியில் பயில 30 பேருக்கு புலமைப் பரிசில்களை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது. இதில் 60 வீதம் பெண்களுக்கே முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. இக்கற்கைநெறி அக்டோபர் மாதம் இறுதிப்பகுதியில் ஆரம்பிக்கப்படும் எனத் தெரியவருகிறது.

# பரந்தனில் 48 ஆயிரம் மிதிவெடிகள் சிறீலங்கா இராணுவத்தால் புதைப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பரந்தனில் தாம் நிலைகொண்டிருந்த காலத்தில் 48 ஆயிரத்து 518 மிதிவெடிகளைப் புதைத்ததாக சிறிலங்கா இராணுவம் தெரிவித்துள்ளது.

மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும்பிரிவிற்கு ஐநா அபிவிருத்தித்திட்டம் ஊடாக வழங்கிய தகவலறிக்கை ஒன்றிலேயே இந்த விபரம் வெளியிடப்பட்டுள்ளது.கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளைச் சீரான முறையில் மேற்கொள்வதற்கு உதவியாகக் கண்ணிவெடிகள், மிதிவெடிகள் புதைக்கப்பட்ட இடங்களில் விபரங்கள் அடங்கிய வரைபடம் மற்றும் விபரங்களைப் பெறுவதற்கு ஐநாடுகளின் அபிவிருத்தி நிறுவனம் உதவிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.


## பயணியர் பேருந்துப் பணி



புதுக்குடியிருப்பு, கற்சிலைமடு, கரிப்பட்டமுறிப்பு, மாங்குளம், புளியங்குளம் வழித்தடத்தில 12-08-2003 ஆம் நாளில் இருந்து மேற்படி பணி பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனை பொது மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நேர ஒழுங்கு:

**புதுக்குடியிருப்பு - புளியங்குளம்**

| புதுக்குடியிருப்பு | கற்சிலைமடு | மாங்குளம் | புளியங்குளம் |
|---|---|---|---|
| காலை 11.30 | 12.15 | 02.15 | 3.00 |

**புளியங்குளம் - புதுக்குடியிருப்பு**

| புளியங்குளம் | மாங்குளம் | கற்சிலைமடு | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|
| காலை 09.00 | 09.45 | 11.45 | 12.30 |

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி, வழியனுமதிப் பணியகம்.

(சி-8454)



## சிந்தனைக்கு

சுதந்திர எழுச்சியின் உந்துதலால் தான் மனித வரலாற்றுச் சக்கரம் சுழல்கின்றது.

தமிழீழத் தேசியத்தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 10-08-2003

## கைகளை மீறி....!

திருமலை மாவட்டம் குரங்குபாஞ்சான் பகுதியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் முகாம் தொடர்பான பிரச்சினை அரசிற்கும்– விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான விவகாரம் என்ற போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பேச்சாளரின் அறிவிப்பானது, இவ்விவகாரம் தமது கைக்கு அப்பாற்பட்ட விடயமாகி விட்டது என்பதை வெளிப்படுத்துவதாய் உள்ளது.

இத்தகையதொரு நிலைக்கு கண்காணிப்புக்குழுவின் முடிவிற்கேற்ப விடுதலைப்புலிகள் குரங்குபாஞ்சான் முகாமை அகற்ற முன்வராமையே காரணம் என்பது கண்காணிப்புக் குழுவின் நிலைப்பாடாகும். ஆனால், இத்தகையதொரு நிலை ஏற்பட்டமைக்கு, இவ்விவகாரத்தில் கண்காணிப்புக்குழுவின் தீர்மானமானது ஒருதலைப்பட்சமானதாக இருந்ததோடு அது இவ்விடயத்தில் காட்டிய அளவிற்கு மீறிய தீவிரமுமே காரணமாகும்.

குரங்குபாஞ்சான் முகாம் தமது கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே அமைந்துள்ளது என்பதில் விடுதலைப்புலிகள் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

அத்தோடு, இம்முகாம் யுத்தநிறுத்த உடன்பாட்டிற்குப் பல வருடங்களுக்கு முன்னதாகவே அப்பகுதியில் உள்ளது. ஆகையினால், அம்முகாம் அகற்றப்படுதல் என்ற பேச்சிற்கே இடமில்லை என்ற நிலைப்பாட்டை அவர்கள் ஆரம்பம் முதலே வெளிப்படுத்தியும் வந்துள்ளனர்.

இத்தகைய நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் விடுதலைப்புலிகள் – யுத்தநிறுத்த உடன்பாடு கைச்சாத்தாகிய பின்னர் தமது கட்டுப்பாட்டுப் பகுதியெனத் தாம் வழங்கிய வரைபடத்தில் குரங்கு பாஞ்சான் பகுதி உள்ளடக்கப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளனர். அத்தோடு, அப்பகுதியில் தமது போராளிகளின் வித்துடல்கள் விதைக்கப்பட்டுள்ளதையும் அது தமது கட்டுப்பாட்டுப் பகுதி என்பதை வலியுறுத்தி அவர்கள் ஆதாரமாகத் தெரிவித்து வருகின்றார்கள்.

ஆனால், கண்காணிப்புக்குழு புலிகளின் இவ் ஆதாரங்களைப் புறந்தள்ளிவிட்டு சிறிலங்கா இராணுவத் தரப்பின் நிலைப்பாட்டிற்கு ஏற்ற வகையில் இப்பகுதியை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியெனவும், அங்கிருந்து புலிகள் வெளியேற வேண்டும் எனவும் தனது முடிவை வெளியிட்டது. இதேவேளை, விடுதலைப்புலிகள் தமது நிலைப்பாட்டை மீள வலியுறுத்திய போதும் கண்காணிப்புக் குழு அதனை மீள்பரிசீலனை செய்யவில்லை. இந்நிலையில் தான், புலிகள் கண்காணிப்புக் குழுவின் தீர்மானத்திற்கு மதிப்பளிக்க முடியாத நிலை உருவானது.

இதேவேளை, கண்காணிப்புக் குழு இவ்விடயத்தில் காட்டிய தீவிரமும், இன்று இதனைத் தமது கைமீறிய செயல் எனக் கண்காணிப்புக் குழு கூறவேண்டியதாயிற்று எனலாம். அதாவது யுத்த நிறுத்த உடன்பாட்டின் பிரகாரம் கண்காணிப்புக் குழு நிறைவேற்ற வேண்டிய–அதேவேளை அதனால் நிறைவேற்ற முடியாத பல விடயங்கள் இன்னமும் உண்டு. இவற்றையெல்லாம் கைமீறிய செயல் என அறிவிக்காத கண்காணிப்புக்குழு, குரங்குபாஞ்சான் முகாம் விவகாரத்தில் மட்டும் கைமீறியதெனக் கூறவேண்டிய நிலை உருவானது ஏன்?

எடுத்துக்காட்டாக, போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி 17 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும், ஒப்பந்தத்தின் பிரகாரம் 30 நாளில் இருந்து 180 நாட்களில் செய்து முடிக்க வேண்டிய பல விடயங்கள் இன்னமும் நிறைவு செய்யப்படவில்லை. விடுதலைப் புலிகள் காட்டிவரும் ஒத்துழைப்பு, பொறுமை என்பன காரணமாகவே இவ் உடன்பாட்டு மீறல்கள் ஒப்பந்தத்தை நெருக்கடிக்குள் தள்ளாது காத்து வருகின்றதெனலாம்.

இவ்வாறு உடன்பாட்டு விதிகள் அமுலாக்கம் பெறாமைக்குச் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பு உடன்பாட்டு விதிகளை மதிக்காமையே காரணம் என்பது வெளிப்படையானது. இந்நிலையில், அத்தகைய ஒப்பந்த மீறல் விவகாரங்களைப் பட்டியலிட்டு, அவை தமது கை மீறிய செயல் எனக் கண்காணிப்புக்குழு ஏன் இது வரையில் அறிவிப்புச் செய்யவில்லை? இவற்றில் எல்லாம் காட்டாத தீவிரம் குரங்கு பாஞ்சானில் மட்டும் கண்காணிப்புக்குழு காட்டியதேன்?

கண்காணிப்புக்குழுவின் செயற்பாட்டிற்கு இதுவரையில் விடுதலைப்புலிகள் தமது ஒத்துழைப்பை வழங்கியே வந்துள்ளனர். சிறிலங்கா ஆயுதப் படையின்–குறிப்பாகக் கடற்படையின் பெரும் அத்துமீறல் செயல்கள் இடம்பெற்ற போதும் புலிகள் பொறுமை காத்தனர்; கண்காணிப்புக் குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்கினர். ஆனால், குரங்குபாஞ்சான் முகாம் விவகாரத்தில் விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளனர் எனின், அவர்கள் தமது தரப்பில் முழு அளவில் நியாயப்பாடு உண்டு என்பதன் அடிப்படையிலேயே ஆகும்.

ஆனால், கண்காணிப்புக்குழு எடுத்த தீர்மானம் காரணமாகவும், காட்டிய தீவிரம் காரணமாகவும் கண்காணிப்புக்குழுவின் நடுநிலைமை, நம்பகத் தன்மை குறித்துக் கேள்வி எழுந்துள்ளது. அது மாத்திரமல்ல, சமாதானத்திற்கு விரோதமான சக்திகளின் பிரச்சாரத்திற்கும் வாய்ப்பைக் கொடுத்ததாகி விட்டது.

# அமெரிக்க அழுத்தத்தால் நிதி நிறுவனங்கள் ரணில் அரசிற்கெதிராக பேசத் தயங்குகிறது

## பொ.ஐ.மு.பேச்சாளர் கூறுகிறார்

(கொழும்பு)

அமெரிக்கா மற்றும் சில சக்திகளின் அழுத்தம் காரணமாகவே உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் இலங்கையில் திராணியற்ற நிலையில் இருப்பதாகக் கடும் கண்டனத்தைத் தெரிவித்திருக்கும் பொதுசன ஐக்கிய முன்னணி இந்த பின்னணியான அழுத்தத்தின் காரணமாகத்தான் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் ஊழல்களையும், மோசடிகளையும் இந்தச் சர்வதேச நிதிநிறுவனங்கள் கண்டும் காணாததுபோல் இருப்பதாகக் குற்றம் சாட்டியிருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இந்தக் குற்றச் சாட்டை முன்வைத்தபொதுசன ஐக்கிய முன்னணியின் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி சரத் அமுனுகம மார்க்கோஸ், சுஹார்ட்டோ, பெனாஸிர் பூட்டோவுக்கெதிராகச் செயற்பட்ட உலக வங்கி ரணில் விக்கிரமசிங்கவுக்கெதிராக பேசத் தயங்குவதற்கான காரணத்தை பொதுசன ஐக்கிய முன்னணி நன்கு அறிந்து வைத்திருப்பதாகத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பிலான உண்மையான பின்னணியையும் நாம் விரை வில் அமுல்படுத்துவோம்.

இடைக்கால நிர்வாகசபை சம்பந்தமாக அரசினால் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்டுள்ள யோசனைகள தான் சனாதிபதிக்கும் வழங்கப்பட்டதாகப் பிரதமர் கூறுகிறார். ஆனால் பத்திரிகையில் வெளிவந்த ஆலோசனைகள்தான் புலிகளுக்கு அனுப்பப்பட்டதாக அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கூறுகி றார்.அப்படியாயின் எந்த ஆலோசனை சரியானது.

முரண்பாடொன்றை ஏற்படுத்தும் வகையில் பிரதமருக்கெதிராகச் செயற்படும் அமைச்சர்கள் எவராவது இந்த ஆலோசனைகளைத் திரிபுபடுத்திப் பத்திரிகைகளுக்கு வழங்கினார்களா? அல்லது உல்லாசப் பயணிகளுக்கான விசாவில் வந்து ஏற்பாட்டாளராகச் செயற்படும் நோர்வேயின் முன்னாள் தூதுவர் இதில் திருத்தங்களைச் செய்தாரா? என்பதை அரசாங்கம் விளக்க வேணடும். உல்லாசப் பயணிபோன்று செயற்படும் ஜோன்வெஸ்போர்க்கிற்கு உள்ள அதிகாரங்களை அரசு தெளிவுபடுத்த வேண்டுமென சரத் அமுனுகம மேலும் தெரிவித்தார்.

# கொழும்பில் அதிரடிப்படையுடன் இணைந்து போலிசார் திடீர் வாகன சோதனை

(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன்தினம் பல்வேறு பகுதிகளிலும் பொலிசார் திடீர் வாகனச் சோதனைகளில் ஈடுபட்டனர்.

வாகனங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்களைக் கண்டு பிடிக்கும் முகமாகவே இந்த வாகனச் சோதனைகள் இடம்பெற்றதாக கொழும்பு நகர மோட்டார் போக்குவரத்துப் பிரிவுப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாகனச் சேதனைகள் திடீர் சோதனை நிலையங்கள் மூலமே மேற்கொள்ளப்பட்டன. இதில் சாதாரண பொலிசாருடன் விசேட அதிரடிப்படையினரும் ஈடுபட்டனர். இதன்போது வெடிப்பொருட்கள் மற்றும் ஆயுதங்களைக் கண்டுபிடிக்கும் உபகரணங்களும் பயன்படுத்தப்பட்டன.

சனாதிபதி கொழும்பில் விசேட வைபவமொன்றில் கலந்து கொள்ளவிருந்ததால் வாகனச் சோதனை தீவிரப்படுத் தப்பட்டிருந்ததாக பொலிஸ் தலைமையக மோட்டார் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அல்பிரட் விஜேவர்தன தெரிவித்தார்.

# சிறைகளில் சட்டவிரோத நடவடிக்கை தடுக்க சோதனை, தேடுதல்கள்!

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் இடம்பெற்று வரும் மோசடி மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் பணிப்பின் பெயரில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் ருமம்சுக் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

நாட்டிலுள்ள பிரதான சிறைச்சாலைகளில் திடீர் தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடவும் தேடுதல்களின் போது சிறைச்சாலைக்குள் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் என்று நிருபிக்கப்படும் கைதிகளுக்கும் சிறைச்சாலை ஊழியர்களுக்கும் எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக சிறைச்சாலைக்குள் கையடக்கத் தொலைபேசிப் பாவனைகள் மற்றும் ஹெரோயின், கஞ்சா உட்பட போதைப் பொருட்கள் பாவனைகள் தொடர்பான தகவல்களும் பாதாள உலக சந்தேக நபர்களுடன் சிறைச் சாலை உத்தியோகத்தர்கள் சிலருடன் ஏற்பட்டுள்ள இரகசியத் தொடர்புகள் பற்றியும் தகவல்கள் வெளியாகி யிருந்தன.

வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் உள்ள மாடிக் கட்டமொன்றுக்குள் கஞ்சா பயிரிட்டிருந்ததும் மோசமான குற்றவாளிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக்கூடமொன்றின் வாசலுக்கு அருகில் கையடக்கத் தொலைபேசி ஒன்று இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

கைதிகளுக்கு ஹெரோயின் போதைப் பொருட்களை மறைத்து எடுத்துச் சென்ற சிறை அதிகாரி ஒருவர் பிடிபட்டது போன்ற சம்பவங்கள் சிறைச்சாலை நிர்வாகத்திற்கு பாதுகாப்பு மற்றும் உயிராபத்து அச்சுறுத்தல்களைக் கொடுத்துள்ளதை யடுத்து அவற்றைத் தடுக்கும் முகமாக எதிர்காலத்தில் சிறைச்சாலைக்குள் சிறந்த நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

# இந்திய அணியில் மீண்டும் இடம் பெறுவேன்

## ஜடேஜா நம்பிக்கை



நான் இப்பொழுது முழு உடல் திறன் பெற்றுள்ளேன் விரைவில் இந்திய கிரிக்கெட் அணியில் இடம் பெறுவேன் என்று அஜய் ஜடேஜா அறிவித்துள்ளார்.

மூன்று ஆண்டுகளிற்கு முன்னர் இந்திய அணியில் நம்பிக்கை நட்சத்திரமாக உலாவந்த அஜய் ஜடேஜாவுக்கு ஆட்ட நிர்ணய சதியில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுப் போட்டியில் பங்குபற்றத் தடை விதிக்கப்பட்டது. இதனை எதிர்த்து இவர் டில்லி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். அதன் பின்னர் உள்ளூர் போட்டிகளில் மட்டும் விளையாட அனுமதியளிக்கப்பட்டது.


இவர் தற்போது பெங்களூரில் நடைபெற்று வரும் அகில இந்திய எம்.ஆர்.எவ் கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகின்றார். அத்துடன் தம்மால் மீண்டும் இந்திய அணியில் இடம்பெற முடியும் எனவும் அவர் நம்பிக்கை கொண்டுள்ளார்.

# இங்கிலாந்து அணியை நிமிர்த்த முயலும் ஹூசைன்

இங்கிலாந்து கிரிக்கெட்சபை எனக்கு வாய்ப்புக் கொடுத்தால் தென்னாபிரிக்க அணியுடன் அடுத்த போட்டியில் ஆடத்தயாராகவுள்ளதாக இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் நசார் ஹூசைன் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி தற்போது சோதனைகளின் உச்சத்தில் இருக்கிறது. உள்ளூரில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக நடந்து வரும் டெஸ்ட் கிரிக்கெட்டில் பரிதாபமான முடிவை இங்கிலாந்து சந்தித்தது. சிலவருட இடைவெளியின் பின் டெஸ்ட் போட்டிகளுக்காக மீண்டும் அணியில் இணைந்த டெரன்கோ தனது பந்து வீச்சின் திருப்தியின்மையால் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து தனது ஓய்வு முடிவை அறிவித்தார்.

இதுபோன்ற சிக்கலான நிலையில் முன்னாள் தலைவர் நசார்ஹூசைன் அணியில்இருந்து விலகப்போவதாகச் செய்திகள் வெளியாகின. ஆனால் இச்செய்திகளை மறுத்து இங்கிலாந்து கிரிக்கெட்சபை எனக்கு வாய்ப்புக் கொடுத்தால் தென்னாபிரிக்காவுடன் அடுத்த ஆட்டத்தில் ஆடத்தயாராகவுள்ளேன் என்றும் அறிவித்துள்ளார்.



# இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளை மீள அழைக்கத் திட்டம் வகுக்கவேண்டும்

## யாழ். அரசாங்க அதிபர் கோரிக்கை

இந்தியாவிலுள்ள இலங்கையரை மீள அழைப்பதற்கு முறையான திட்டங்களை அரசு வகுக்க வேண்டுமென யாழ் மாவட்ட அரச அதிபர் பத்மநாதன் கூறியுள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு நாடு திரும்பும் இலங்கை அகதிகள் உயிராபத்து உட்பட பல பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழகத்திலிருந்து சட்ட விரோதமாக இலங்கைக்குத் திரும்பும் அகதிகள் இந்திய படகோட்டிகளினால் நெடுந்தீவில் தரையிறக்கி விடப்படுவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

கடல் கொந்தளிப்பான நிலையில் சிறிய படகுகளில் நாடு திரும்பும் அகதிகள் கடலில் மூழ்கி உயிரிழக்கக் கூடிய அபாயம் காணப்படுவதனால் இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தி உரிய தீர்வு காணப்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பிரதமரிடம் வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு கிழக்கிற்குத் தனியாக வழங்க வேண்டும்

## முஸ்லிம் பா. உ. அமைப்பு கோர முடிவு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வழங்கப்படுமேயானால் கிழக்கு மாகாணத்திற்கு தனியான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு கட்டாயம் வழங்கப்பட வேண்டும் என்று கோருவதென முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைப்பு தீர்மானித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை இரவு கூடிய முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இத்தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளதாக இவ் அமைப்பின் செயலாளர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கூறியுள்ளார்.

முஸ்லிம் புத்திஜீவிகள், சட்ட வல்லுநர்கள் ஆகியோரும் கலந்து கொண்ட இக்கூட்டம் ஐந்து மணி நேரம் நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் கோரிக்கையின் பேரில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வழங்கப்படுமேயானால் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் கிழக்கிற்கு தனியான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வழங்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்தைக் கோருவதென இக்கூட்டத்தில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

இத்தீர்மானம் விரைவில் அரசிடம் சமர்ப்பிக்கப்படும் என்று ஹிஸ்புல்லாஹ் தெரிவித்திருக்கின்றார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதாவுல்லா தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்களும தேசிய ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

அரசின் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வரைவுக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அமைப்பு ஏற்கனவே மாற்று யோசனைகளைத் தயாரித்திருந்தது. இந்த யோசனைகளும் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட இருக்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## காவல்துறையால் ஒப்படைக்கப்பட்ட

# சிறுவனின் தந்தையாரை சமுகம் தரக் கோரிக்கை

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றிற்கு பளைக் காவல்துறையினரால் முற்படுத்தப்பட்ட சந்திரன் நிசாந்தன் (வயது -09) அடைக்கலமாதா கோவிலடி, யாழ்ப்பாணம் என்பவர் நீதிமன்ற பாதுகாப்பில் உள்ளார். அவரது தந்தையா ரானசந்திரன் என்பவர் கிளிநொச்சியில் வசிப்பதாக அறிய முடிகிறது. எனவே குறித்த சந் திரன் என்பவரை கிளிநொச்சி நீதி மன்றுக்குச் சமுகம் கொடுக்குமாறு மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

# அமெரிக்காவின் நாட்டுப்பற்றாளர் சட்டத்திற்கு எதிராக இலங்கைத் தமிழ் வைத்தியர் வழக்குத் தாக்கல்

அமெரிக்காவில் அமுலில் இருக்கும் நாட்டுப்பற்றாளர் சட்டமூலம் அந்நாட்டின் அரசியலமைப்பிற்கு முரணானது எனக் கூறி அமெரிக்காவில் வாழும் இலங்கைத் தமிழ் வைத்தியரொருவர் லொஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்றில் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

அமெரிக்காவின் உலக வர்த்தக மையம் மீது 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து இச் சட்டம் அங்கு கொண்டு வரப்பட்டது. இச் சட்டப்படி அமெரிக்காவில் தடை செய்யப்பட்டுள்ள இயக்கங்களுக்கு நிபுணத்துவ ஆலோசனை வழங்குவது உட்பட பொருளாதார ரீதியில் உதவி புரிவது தண்டனைக்குரியகுற்றமாகும்.

இப்போது இச்சட்டமூலத்திற்கு எதிராக அமெரிக்காவில் வாழும் இலங்கைத் தமிழரான ஜெயலிங்கம் என்ற வைத்திய நிபுணர் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

தான் இலங்கையின் வடக்கு, கிழக்கு் பகுதிகளிலுள்ள அகதிமுகாம்களில் வைத்திய வசதியின்றி இருப்போருக்கு வைத்திய உதவி வழங்க விரும்புவதாகவும், ஆனால், இம் முகாம்களில் சில, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்திருப்பதால் அங்கு மருத்துவ உதவி புரிந்தால் புலிகளுக்கு உதவியதாக தண்டிக்கப்படலாம் என அஞ்சுவதாகவும் ஜெயலிங்கம் தெரிவித்தார்.

## இளம் குடும்பஸ்தர் படுகாயம்

கோப்பாய் பகுதியில் உந்துருளி சிற்றூர்தி விபத்தொன்றில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் படு காயமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை 11.00 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. ஆவரங்காலைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான எம் மோகன் (28 வயது) என்பவரே படுகாயமடைந்தவராவார் (33)

# 300 குடும்பங்கள் மீள் குடியேற்றம்

(கொழும்பு)

உயர் பாதுகாப்பு வலயமான ஓமந்தைப் பிரதேசத்தில் 300 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நிக்கோட், நியாப், நீப் ஆகிய அபிவிருத்தித் திட்டங்களின் இப்பகுதிகளில் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் வீடுகளைக் கட்டுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

---

### கச்சதீவு...

வார்த்தை குறித்தும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தமது அறிக்கையில் அதிருப்தியைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (33)






# திருமலை தம்பலகாமத்தில் தையற் பயிற்சி நிலையம்



திருகோணமலை - தம்பலகாமத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தையல் பயிற்சி நிலையம் ஒன்றைத் திறந்துள்ளது.வேலையற்ற பெண்களுக்கு தொழிற் பயிற்சியை வழங்கும் நோக்கோடு அமைக்கப்பட்ட இந்தப் பயிற்சி நிலையத்தில் ஆரம்ப தினத்தன்று 27 பயிற்சியாளர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இப்பயிற்சி நிலையத்தை நேற்று முன்தினம் தம்பலகாமம் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ். திருமலை நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் பயிற்சியாளர்களுக்கு உபகரணங்களையும், துணிகளையும் வழங்கினார். இந்நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழக திருகோணமலை மாவட்ட பணிப்பாளர் மாதவராஜா, த.பு.கழகத்தின் தம்பலகாமப் பிரதேச தலைவர் நல்லசிவம், த.பு.கழகத்தின் திட்டப் பணிப்பாளர் கலைவாணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# யாழ்.இல் பாதிக்கப்பட்டோர் விபரம் த.பு.க. சேகரிப்பு

யாழ். குடாநாட்டில் இராணுவத்தினரின் தாக்குதலுக்குள்ளாகி பாதிக்கப்பட்டோரின் விபரங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சேகரித்து வருகின்றது.

இவர்களுக்கு உதவுவதற்காக இவ்விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்தில் மீளக் குடியேறிவரும் மக்களின் விபரங்களையும் த.பு.கழகம் சேகரித்து வருகின்றது.

# அமைச்சர் மிலிந்தமொறகொட நேற்றுக் கொழும்பு திரும்பினார்

(கொழும்பு)

இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்த சிறிலங்காவின் பொருளாதார மீள் கட்டமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்றுக் காலை கொழும்பு திரும்பியுள்ளார்.

புதுடில்லிக்கு இரு நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்த அமைச்சர் இந்திய பிரதமர் வாஜ்பாய், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்சிங்கா, பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பர்னாண்டஸ், பிரதமரின் வெளிவிவகாரச் செயலாளர் பிரதேஸ்மிஸ்ரா ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியிருந்தார். இந்தப் பேச்சுவார்த்தை தொடர்பான விடயங்களை அமைச்சர் மிலிந்த மொறகொட புதுடில்லியிலிருந்து பிரதமரோடு தொடர்பு கொண்டு பேசியதாகவும் அறிவிக்கப்பட்டது.

---

### குரங்கு...

ஒஸ்ரின் பர்னாண்டோ எரிக் சூல்ஹெய்ம் விடுதலைப்புலிகளுடன் பேசிய பிறகு இந்த பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் என்று நம்புகிறோம் என்றார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசத்திற்குள் இந்த முகாம் பலவருடங்களாக உள்ளது. இதனால் இம் முகாமை அக ற்ற வேண்டிய தேவை இல்லை என விடுதலைப்புலிகள் தெரிவித் திருந்தது தெரிந்ததே.

---

### சிறிலங்காப்...

கொண்டுவரும் சமாதான முயற்சிகள் பற்றியும் சீனத் தலைவர்களுக்கு பிரதமர் ரணில் எடுத்து விளக்கவுள்ளதோடு தனது சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குமாறும் சீன அரசைக் கோரவுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் பிரதமர் ரணில் சீனப் பயணத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தபோதும் சீனாவில் பரவிய சார்ஸ் நோய் காரணமாக அந்தப் பயணம் பிற்போடப்பட்டது தெரிந்ததே.

சிறிலங்காவிற்கு சிறியரக ஆயுதங்களை விற்பனை செய்வது, படையினருக்கு பயிற்சிகளை வழங்குவது போன்ற நடவடிக்கைகளில் சீனா முக்கிய இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

---

### இராணுவத்தி...

இக்கொலையில் புலிகளுக்குத் தொடர்பிருக்கலாம் என பொலிஸ் தரப்பில் வெளியிடப்பட்ட சந்தேகம் குறித்து புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறையின் பிராந்திய ஊடகப் பேச்சாளர் கூறுகையில், இச்சம்பவத்திற்கும் தங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என தெரிவித்துள்ளார்.

---

### க.பொ.த...

கிளி.இந்துக்கல்லூரி மாவட்ட நிலையில் முதலிடம், இ.இதயரூபன் உயிரியல் பிரிவு ஏ.பி.சி கிளி. மத்தியகல்லூரி, சி.தேவிகா உயிரியல் பிரிவு ஏ.பி.சி கிளி.மத்திய கல்லூரி ஆகியோரும் கலைப்பிரிவில் கிளி. முருகானந்தா ம.வியைச் சேர் ந்த இ.ரமேஸ்கரன் ஏ.2பி. (லோ)

---

### வவு...

ஒன்றும், 10 அடித் தூரத்தில் 9 மி.மீ. துப்பாக்கியின் வெற்றுத் தோட்டா, முறிந்த தடி ஒன்றும் தடயப் பொருட்களாக ஸ்தலத்திற்குச் சென்ற வவுனியா மாவட்ட நீதிபதி மேற்கொண்ட சோதனையின்போது கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இச்சடலத்தை மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிபதி இளஞ்செழியன் வவுனியா வைத்திய சாலை பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

## பிற்போடப்பட்டது

10-08-2003அன்று வட்டக்கச்சி ஜொனி விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படவிருந்த மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தால்பிற்போடப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.